DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Name : சாந்தி | Father/Husband Name : கவிராஜ் S ராஜ்குமார் |
| Age : 54 | Village : சாத்தான்குளம் |
| Taluk : | Calling : |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23 Jan 2025

(Respondent not present. His Counsel present and filed a petition and allowed.)

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-

51. நான் தாக்கல் செய்துள்ள என்னுடைய ஆதார் அட்டையில் (ம.சா.ஆ.1) என்னுடைய கணவரின் பெயர் கவிராஜ் எஸ். ராஜ்குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 - பாகப்பிரிவினை ஆவணத்திற்கும் இந்த வழக்கில் உள்ள வினாவிற்கும் தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 - குடும்ப அட்டையில் இன்று வரை என்னுடைய பெயரும் என்னுடைய கணவரின் பெயரும் இருக்கிறது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சண்முகம் என்று ஒரு நபர் கிடையாது என்றால் அவர் முத்துமாரியின் அப்பா ஆவார். அந்த ஆவணத்தில் உள்ள ராஜ்குமார் என்பது என்னுடைய கணவரின் பெயர் இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்திற்கும் என்னுடைய கணவருக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள சண்முக மகாராஜா மற்றும் வசந்தகுமார் ஆகிய இருவரும் முத்துமாரியின் மகன்கள் என்றால் சரிதான்.

52. ம.சா.ஆ.5 புகைப்படங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றாலும், உரிய அங்கீகாரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும் அவை சட்டப்படி சாட்சியமாக அனுமதிக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 தொடர்புடைய வங்கி கணக்கு பணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, நான் மேலாளரிடம் கேட்டபோது அதில் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் மேல் இருப்பதாக கூறினார். அந்த ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 புகைப்படத்தை வைத்து அதில் நான் அணிந்துள்ள நகைகளின் எடை எவ்வளவு என்பதையும், அவை தங்கமா? அல்லது கவரிங்கா? என்பதை கூற முடியாது என்றாலும் சரியல்ல, அந்த புகைப்படத்தை பார்த்தாலே அந்த ஆபரணங்கள் தங்கம் என்பது தெரிகிறது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் மேற்படி நகைகளுக்கான ரசீது தாக்கல் செய்யாததாலும், அந்த ஆவணத்தை முறைப்படி

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.23 17:43:14 +0530

தாக்கல் செய்யாததாலும் அவை சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவை திருமணத்தின் போது போடப்பட்டதாகும்.

53. ம.சா.ஆ.8 கடிதங்களில் என்னுடைய கணவரைப் பற்றி எவ்விதமான குற்றமும், குறையும் கூறவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள பொது அதிகார முகவர் யார் என்றால் சாட்சி அந்த ஆவணத்தை பார்த்துவிட்டு அவரால் அந்த ஆவணத்தை வாசிக்க முடியவில்லை என்று கூறுகிறார். அந்த ஆவணத்தை நான் எதற்காக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்துக்களை வைத்து என்னுடைய கணவர் அவருடைய இரண்டாவது மனைவிக்கு சொத்துக்கள் வாங்கியுள்ளார் என்பதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றாலும், அந்த ஆவணத்தில் அதற்கான ஆதாரம் எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. அந்த ஆவணத்தில் என்னுடைய கணவரின் பெயர் இடம் பெறவில்லை என்றால் கவிராஜ் எஸ். ராஜ்குமார் மனைவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் என்னுடைய கணவர் சாட்சி கையொப்பம் எதுவும் செய்துள்ளாரா என்றால் இல்லை.

54. ம.சா.ஆ.10 வது ஆவணம் ஏற்படுத்தும் போது என்னுடைய சகோதரி வெளிநாட்டில் இருந்ததால் அவர் என்னுடைய கணவருக்கு முழு மனதுடன் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்து, அதன் அடிப்படையில் என்னுடைய கணவர் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் என்னுடைய கணவர் பெயருக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தது உண்மைதான், ஆனால் அந்த இடத்தை அதிகமான விலைக்கு விற்பனை செய்துவிட்டு, என்னுடைய தங்கைக்கு குறைவான தொகையை மட்டும் கொடுத்துள்ளார், அதுதான் பிரச்சனைக்கு காரணம் ஆகும். நான் கூறுவது பொய்யான குற்றச்சாட்டு என்றால் இல்லை. என்னுடைய சகோதரி இளங்கலை பொறியியல் படித்துள்ளார் என்றால் சரிதான். இந்த ஆவணத்திற்கும் அசல் மனு தீர்வுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல.

55. ம.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை என்னுடைய கணவர் தான் முத்துமாரிக்கு வாங்கி கொடுத்ததாக கூறுவது பொய் என்றாலும், அதற்கான ஆதாரம் எதுவும் அந்த ஆவணத்தில் காணப்படவில்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.12 முதல் 17 ஆவணங்களுக்கும் அசல் மனு தீர்வுக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல, என்னுடைய பணத்தை வைத்து தான் அவர் அந்த ஆவணங்களில் உள்ள சொத்துக்களை வாங்கியுள்ளார் என்பதால் இந்த வழக்கிற்கு தொடர்புள்ளது. சாத்தான்குளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளையில் உள்ள எங்களுடைய ஜாயிண்ட் அக்கவுண்டில் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை உள்ள வங்கி கணக்கு அறிக்கையை பார்த்தால் எவ்வளவு எனக்கு வந்துள்ளது என்பது தெரியவரும் என்றால் சரிதான். ஆனால், என்னுடைய கணவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் சட்ட ஆலோசகராக இருப்பதால் 1999 முதல் 2005 ஆண்டு வரையிலான அந்த வங்கி கணக்கு அறிக்கையை எனக்கு தர மறுத்து விட்டார்கள் என்றால் சரிதான்.

56. ம.சா.ஆ.18 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள சாத்தான்குளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் உள்ள எங்களுடைய ஜாயிண்ட் அக்கவுண்ட் கணக்கின் அறிக்கை எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை உள்ளது என்றால் 2000 ம் ஆண்டிலிருந்து 2021 ம் ஆண்டு வரைக்குரியதாகும். அந்த அறிக்கையில்

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.23 17:43:20 +0530

2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் எவ்விதமான தகவலும் பதிவு செய்யப்படவில்லை. 2003 ம் ஆண்டு ரூ.6,000/-க்கான பதிவு மட்டும் தான் இருக்கிறது. அதற்கு பிறகு 2005 ம் ஆண்டுக்குரிய பதிவு தான் இருக்கிறது. அந்த ஆவணம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது என்ற அடிப்படை விபரம் கூட தெரியாமலும், அதை அறியக்கூடிய திறனும் இல்லாமலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றால் சரியல்ல. அந்த வங்கி கணக்கு அறிக்கையில் வரவு செலவு இல்லாத காலகட்டத்தில் எவ்விதமான வரவு செலவு இல்லை என்பதால் தான் அது தொடங்கவில்லை என்றால் சரியல்ல, அந்த காலகட்டத்தில் தான் பணம் வந்தது. அந்த காலகட்டத்தில் தான் மேற்படி வங்கி கணக்கிற்கு பணம் வந்தது என்பதை நான் தான் நிரூபிக்க வேண்டும் என்றால் அதை வங்கியில் இருந்து எனக்கு தர மறுத்து விட்டார்கள். நான் அந்த ஆவணத்தை குறித்து முன்னுக்குப் பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

57. அ.சா.ஆ.19 முறைப்படி தாக்கல் செய்யப்படாததால் அது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அந்தப் புகைப்படத்திற்கும் இந்த வழக்கிற்கும் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் ஆரோக்கியமான மனநிலையில் உள்ள நபர் என்று கூறுகிறேன் என்றால் சரிதான். அதை நிரூபிக்க நான் மனநல மருத்துவரின் பரிசோதனைக்கு செல்ல தயாராக இருக்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் அளவிற்கு எனக்கு சட்டப்படியான மன தகுதியற்று, அடிப்படை ஆதாரம் இல்லாமல், பிறரின் தூண்டுதலில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

58. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர் நானும் முத்துமாரி என்ற நபரும் என்றால் சரிதான், அவர் எங்கள் வீட்டிற்கு வேலை செய்ய வந்த வேலைக்காரி ஆவார். முத்துமாரி எங்கள் வீட்டில் வேலைக்காரியாக இருந்தார் என்பதற்கு எவ்விதமான ஆதாரமும் கிடையாது என்றாலும், நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல, அவர் வேலைக்காரி என்பதற்கு அக்கம்பக்கம் உள்ள நபர்கள் சாட்சிகள் ஆவார்கள். **(**அந்த புகைப்படம் எ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

59. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என்னுடைய மகளின் திருமணத்தின்போது என்னுடைய மருமகனுடன் முத்துமாரியின் மகன்களான சண்முகராஜன் மற்றும் வசந்தகுமார் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் என்றால் அவர்கள் திருமணத்தின் போது வந்ததால் மற்ற நபர்களைப் போல் அவர்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். **(**அந்த புகைப்படம் எ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அது மாப்பிள்ளை அழைப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் இல்லை.

60. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என்னுடைய மகளின் திருமணத்தின்போது எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் நான், என்னுடைய கணவர் மற்றும் முத்துமாரி ஆகியோர் இருக்கிறோம் என்றால் அது கூட்டத்தோடு எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகும். **(**அந்த புகைப்படம் எ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அந்த புகைப்படத்தில் என்னுடைய மாமனார் மற்றும் மாமியார் இருக்கிறார்களா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என்னுடைய மகளின் திருமணத்தின்போது எடுக்கப்பட்டது என்றாலும், அதில் என்னுடைய கணவர், முத்துமாரி மற்றும் என்னுடைய

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.23 17:43:23 +0530

கணவரின் பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான், அது கூட்டத்தோடு கூட்டமாக குரூப் குரூப்பாக எடுக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகும். **(**அந்த புகைப்படம் எ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

61. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் என்னுடைய மகளின் திருமணத்தின்போது என்னுடைய மகள் மற்றும் மருமகனுடன் முத்துமாரியின் மகன் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் என்றால் சரிதான். அது திருமணத்தின் போது உள்ள சடங்கு நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் அந்த புகைப்படத்தில் அந்த நபர் என்னுடைய மருமகனுக்கு ஒரு சட்டை கொடுக்கிறார், அது சடங்கா? என்று எனக்கு தெரியவில்லை. **(**அந்த புகைப்படம் எ**.**சா**.**ஆ**.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) (**குறியீடு செய்யப்பட்ட **5** புகைப்படங்களும் சிடியுடன் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது**)**

62. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்னுடைய மகளின் திருமண பத்திரிக்கை என்றால் சரிதான். **(**அது எ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அந்த திருமண பத்திரிக்கையில் முத்துமாரியின் இரு மகன்கள் ஆன சண்முக மகாராஜா மற்றும் வசந்தகுமார் ஆகியோர்களின் பெயர் மணமகளின் சகோதரர்கள் என அச்சிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு சேர்க்க கூடாது என்று கூறினேன், ஆனால் என்னை வற்புறுத்தி அந்த பெயர்களை சேர்க்க வைத்தார்கள். அந்தப் பெயர்களை வற்புறுத்தி சேர்க்க வைத்ததாக நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த பத்திரிக்கையில் முத்துமாரியின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அது என்னுடைய மகளின் திருமணம் என்பதால் அதில் முத்துமாரியின் பெயர் எவ்வாறு இடம்பெறும்?.

63. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்களுடைய வீடு கட்டுவதற்காக என் பெயரில் கொம்மடிக்கோட்டை தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியில் கடன் வாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அடமானம் ஆவணம் என்றால் சரிதான். **(11.12.2006** ஆம் தேதியிட்ட பத்திர வைப்பு அடமான ஆவணம் எ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** என்னிடம் காட்டப்படும் ஆவணம் 12.9.2007 ஆம் தேதியிட்ட, மேற்படி அடமானத்தை திருப்பி அதற்கான ரசீது என்றால் சரிதான். **(**அது எ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** அந்த பணம் திருநெல்வேலி என்.ஜி.ஓ.பி காலனியில் உள்ள என்னுடைய சொத்தை ரூபாய் 33 லட்சத்திற்கு விற்பனை செய்து, அதிலிருந்து வந்த பணத்தை வைத்து திருப்பப்பட்டதாகும். அவ்வாறு அந்த கடன் திருப்பப்பட்டதாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் மேற்படி என்னுடைய சொத்தை விற்பனை செய்ததில் இருந்து வந்த பணத்தை வைத்து அடமானம் திருப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் என்னுடைய கணவர் பணமாக கொடுத்து இருப்பார். என்னுடைய கணவர் தான் மேற்படி அடமான பணத்தை கொடுத்தார் என்பதற்கான பதிவும் எ.சா.ஆ.8 ரசீதில் காணப்படவில்லை என்றால் அதில் இருப்பது போல் தெரியவில்லை.

64. என்னிடம் காட்டப்படும் 24.02.2021 ம் தேதியிட்ட மருத்துவர் சொர்ணம் என்பவர் வழங்கிய மருத்துவ குறிப்பு எனக்குரியது என்றால் நான் அவரிடம் சிகிச்சை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை, அந்த மருத்துவர் என்னுடைய கணவருக்கு நெருங்கிய உறவினர் ஆவார். அந்த ஆவணத்தில் உள்ள பெயர் என்னுடைய பெயர் தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மருந்து பரிந்துரை சீட்டு எனக்கு மருத்துவர் ஸ்ரீராம் என்பவரால் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் நான் அந்த மருத்துவரிடம் சிகிச்சைக்காக

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.23 17:43:27 +0530

செல்லவில்லை. அதில் உள்ள பெயர் என்னுடைய பெயர் என்றால் அதில் சாந்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது பொது பெயராகும்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2025.01.23 17:43:29 +0530

Judicial Magistrate(FAC), Sathankulam.